படம் : பஞ்சமி
இசை : இளையராஜா, lyrics: வைரமுத்து
நடிகை : ராஜலக்ஷ்மி
(வைரமுத்து அவர்கள் பி.சுசீலா அம்மாவுக்கு
எழுதிய முதல் பாடல் )

அஆ.. இஈ.. உஊ.. ம்
(சிரிப்பு )
லலால லால லாலலா லலால லால லாலலா
லலால லால லால லால லாலலா

உதய காலமே நனைந்த மேகமே
மொழியின் கதவு திறந்தது
விழியில் விடியல் புலர்ந்தது
அமுதம் பொழிந்து விளைந்த தமிழில்
புலமை பிறந்தது
உதய காலமே நனைந்த மேகமே

1

செம்பருத்தித் தோட்டம் பனியில் நீராடும்
தென்னை இளந்தோப்பு வெய்யிலில் குளிர் காயும்
கன்னிக் கனவு கண்ணில் உறங்கும்
ஈரக்கரை ஓரம் சாரல் விழும் நேரம்
காதல் வந்ததால்..எழுந்து சிரித்து
கொழுந்து விரிக்கும் இளய பூச்செடி..

உதய காலமே நனைந்த மேகமே
மொழியின் கதவு திறந்தது
விழியில் விடியல் புலர்ந்தது
அமுதம் பொழிந்து விளைந்த தமிழில்
புலமை பிறந்தது

2

பொன் விளையும் நேரம் பூக்களின் மா நாடு
மகரந்தச் சேற்றில் வண்டுகள் விளையாட்டு
எந்தன் விழிக்குள் உன்னைத் தேடு
இலைகளின் மீதும் கிளைகளின் மீதும்
கொஞ்சும் தமிழால்.. உனது பெயரும்
எனது பெயரும் எழுதப் போகிறேன்

உதய காலமே நனைந்த மேகமே
மொழியின் கதவு திறந்தது
விழியில் விடியல் புலர்ந்தது
அமுதம் பொழிந்து விளைந்த தமிழில்
புலமை பிறந்தது
உதய காலமே நனைந்த மேகமே
லல்லல்லலலா  லல்லல்லலலா